Volume 5 Issue 1 December 2016 ISSN: 2320- 2653

# ஓவியக்கலைப் பயிற்சியின் அடிப்படையில் தமிழ்மொழி கற்றல் மற்றும் கற்பித்தல் முறை

**ச.பாபு**

*முனைவர் பட்ட ஆய்வாளர், கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை*
*தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர், தமிழ்நாடு*

**இரா. ஆனந்த்அரசு**

*உதவிப்பேராசிரியர், கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை*
*தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ்மொழி கற்பித்தல் முறையில் பள்ளி அளவில் ஆசிரியர் மையக்கல்வியாகவே இருக்கின்றது. ஆசிரியர் விரிவுரை முறையில் கரும்பலகை, புத்தகம், போன்ற துணைக்கருவிகளை மட்டுமே பயன்படுத்தி கற்பிக்கின்றனர். இந்த முறைக்கு மாற்றாக நமது பாரம்பரிய கலையான ஓவியக்கலையைப் பயன்படுத்தி தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் செயலை எவ்வாறு திறம்படச் செய்யலாம்? இந்த முறை கற்பித்தலால் மாணவர்களின் தனித்திறன், கல்வி அடைவு போன்றவை எவ்வாறு மேம்படும். இம்முறையில் கற்பிப்பதன் நோக்கம் மற்றும் தேவைகள்யாவை போன்றவற்றை அறிவதே இந்த ஆய்வாகும்.*

**அறிமுகம்**

உளவியல் ரீதியாக மனிதனின் மனதை மகிழ்விக்கும் தனித்தன்மை நுண்கலைகளுக்கு உண்டு. இந்தியா கலைவளர்ச்சியில் சிறப்பிடம் பெற்ற நாடு என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும். அந்த வகையில் தொல் பழங்காலத்தைச் சேர்ந்த மனிதர் செய்தியை பரிமாறிக்கொள்ள முதலில் சைகை மொழியை பயன்படுத்தினான் (உடல் அசைவுகளால்) பின்னர் அவனுடைய தகவல் பரிமாற்றத்தின் அடுத்த படிநிலையாக ஓவியக் குறியீடுகளைப் பயன்படுத்தினான். காடுகளிலும் மலைக்குகைகளிலும் வாழ்ந்த அவன் குகைப்பாறைகளில் பல்வேறு உருவங்களை வரைந்து தனது பரிமாற்றத்தை விரிவாக்கினான். எனவே தொல் பழங்காலத்தில் ஓவியக் குறியீடுகளையே தகவல் பரிமாற்ற மொழியாகப் பயன்படுத்தினான் என்பது வரலாற்று அறிஞர்கள் கருத்து. மேலும் சிந்துவெளி மக்கள் மண்பானைகளிலும் பல ஓவியக் குறியீடுகளை வரைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நாம் தமிழகத்திலும் பல இடங்களில் தொல் பழங்கால பாறை ஓவியக் குறியீடுகள் காணக்கிடைக்கின்றன. அந்த வகையில் மல்லப்பாடி, கீழ்வளை போன்ற இடங்களில் உள்ள இயற்கையான குகைப் பாறைகளில் மனிதன் வேட்டையாடும்படியாகவும், குதிரை மீது அமர்ந்து தாக்கும் படியாகவும், காளை உருவம், ஆடுகள் போன்றவற்றை ஓவியமாக வரைந்துள்ளனர். மேலும் தமிழகத்தின் பல வரலாற்று சிறப்புமிக்க கோயில்கள், அரண்மனைகளிலும் அழகிய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவையெல்லாம் நமது தொன்மைத் தமிழரின் கலைச்சிறப்பிற்குச் சான்றாகும். இனி அத்தகைய சிறப்புமிக்க ஓவியக்களைப் பயிற்சி அடிப்படையில் தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் முறையை பின்வரும் செய்திகளில் அறியலாம்.

**ஆய்வின் தேவை**

இக்காலக் கல்விமுறைகள் (இந்திய கல்வி முறையில்) ஆசிரியர்மையக் கல்வியாகவே பள்ளிகளில் செயல்படுத்தப்படுகின்றது. குறிப்பாக தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் செயலில் எந்தவித மாற்றமுமின்றி விரிவுரை முறையே ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் மாணவர்கள் புத்தகத்தை மனப்பாடம் செய்து எழுதும் தன்மையை மட்டுமே பெற்று கல்விக்கற்கின்றனர். இதனால் மாணவர்கள் சலிப்புடனும், மனச்சோர்வு அடையும் நிலை ஏற்படுகின்றது. இந்த நிலை மாற கற்றல், கற்பித்தல் செயலில் ஆசிரியர் மாணவர் இருவரும் இணைந்து செயல்படும் வகையிலும் படைப்பாற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கவும், கல்விச்செயலை எளிமையாகவும், இனிமையாகவும் கொண்டு செல்வதற்கு இத்தகைய நுண்கலைப் பயிற்சிவழி தமிழ்மொழி கற்பித்தல் சிறப்பானதாகும். மேலும் இம்முறைப் பயிற்சியினால் மாணவர்களின் கல்வி அடைவும் அதிகரிக்கும். பள்ளிகளில் மாணவர் தேர்ச்சி விழுக்காடு அதிகரிக்கும்.

**ஓவியக்கலை விளக்கம்**

ஓவியம், ஓவம், ஓவு, சித்திரம் என்ற சொற்களில் அழைக்கப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்க்கையோடு ஒன்றியபடி இக்கலை பயன்படுத்தப்படுகின்றது. (வாசலில் வண்ணக்கோலமிடுதல், சுவர் அலங்காரம் ஆலயங்களில் ஓவியங்கள் வளர்தல்) போன்றவற்றை குறிப்பிடலாம். மனிதனில் மனக்கற்பனைக்கு உருகொடுக்கப்பட கைகளால் தீட்டப்படுவது ஓவியமாகும். ஓவியம் வரைபவர்களை ஓவியர்கள் என அழைப்பர். இக்கலை இந்தியாவில் பலவகையான பாணிகளில் வளர்ச்சியடைந்துள்ளது.

அவைகள் கங்கராஓவியப்பாணி, பசோஹ்லிஓவியப்பாணி, புஹாரிஓவியப்பாணி, மதுபாணிஓவியப்பாணி, முகலாயஓவியப்பாணி, ராஜபுதனஓவியப்பாணி போன்றவைகளாகும். இத்தகைய சிறப்புமிக்க ஓவியக்கலைப் பயிற்சியை பின்பற்றி மாணவர்களுக்கு மொழியாசிரியர்கள் கற்றல் கற்பித்தல் செயலுக்கு பயன்படுத்திகனால் சிறந்த பயன் உண்டு.

**ஓவியக்கலைப் பயிற்சியின் வழி கற்பித்தல் செயல் முறை**

ஓவியக்கலை பயிற்சிமுறை பள்ளி அளவில் மாணவர்களுக்கு முதலில் பெண்சில், அளவுகோல், அழிப்பான், வண்ணப்பெண்சில்கள் போன்றவற்றை பயன்படுத்தி அவர்கள் விரும்பிய ஓவியத்தை அறிமுக வகுப்பில் வரையச்செய்ய வேண்டும். பின்னர் அவர்களை மகிழ்வுபடுத்தும் விதமாக கேளிச்சிந்திரங்கள், விலங்குகள், போன்ற எளிமையான ஓவியங்களை வரையச்செய்து அவர்களின் திறமைக்கு பாராட்டுதல்கள் வழங்கவேண்டும். இச்செயல் அவர்களை கலைமீது ஆர்வம் ஏற்படச் செய்யும்.

**கோட்டோவியம் வரையச்செய்தல்**

ஆரம்பநிலையாக மாணவர்களுக்கு தமிழ்மொழி புத்தகத்திலுள்ள செய்யுள், உரைநடை, துணைப்பாடம், சார்ந்தவற்றின் தலைப்பையொட்டிய ஓவியத்தை அவரவர் கற்பனைக்கு ஏற்றவாறு பென்சில் ஓவியமாக வரையச்செய்ய வேண்டும். இம்முறையில் தலைப்பையொட்டிய ஓவியம் வரைவதன் முன் சில வரைபடம் உருவாக்க பயிற்சி தரப்படவேண்டும்.

**கதைக்கு ஏற்ற ஓவியம் வரைதல்**

ஆசிரியர் மாணவர்களுக்கு ஏதேனும் ஒரு நீதிக்கதை கூறி அந்த கதையின் பகுதிகளை கதையின் அளவுக்கு ஏற்றவாறு 1,2,3,4,5,6, என்ற அளவுகளில்

பகுதிகளாகப்பிரித்து ஒரு தாளில் ஒரு பக்கத்தில் 3 கட்டங்களும் அடுத்தபக்கத்தில் 2 கட்டங்களும் வரையச்செய்து ஆசிரியர் கூறிய கதைக்கு பொருத்தமான ஓவியங்கள் வரையச்செய்தல் வேண்டும்.

**வடிவங்களில் உருவங்கள் உருவாக்கம்**

பல்வகை வடிவங்களை ஒரு வெள்ளத்தாளில் (முக்கோணம், சதுரம், வட்டம், செவ்வகம், அரைவட்டம், அறுங்கோணம், நீண்டசதுரம்) வரையச்செய்து அந்த வடிவங்களில் வேறு ஏதேனும் புதிய உருவம் வரையச்செய்ய வேண்டும். இவ்வாறு பயிற்சியளிப்பதால் மாணவர்களின் கைகளுக்குப் சிறந்த பயிற்சியாக அமையும் புதிய உருவாக்கச் சிந்தனை வளர்ச்சியடையும்.

**தமிழ் எழுத்துக்களில் உருவம் வரைதல்**

அ,ஆ,இ,ஈ,உ,ஊ,.....போன்ற உயிர் எழுத்துகள் தொடங்கி மெய்யெழுத்துக்களிலும் ஒரு சொல்லின் முதன் எழுத்தினை அந்த சொல்லின் பொருள் விளங்குமாறு ஓவியமாக வரை வேண்டும்" " (எ.கா) ஆடு என்றசொல்லின் முதலெழுத்தாகிய "ஆ" என்ற எழுத்தில் ஆட்டினுடைய ஓவியத்தை வரையச் செய்ய வேண்டும். இப்படியான பயிற்சிகளால் பள்ளி மாணவர்கள் ஆர்வமாகவும், மன அழுத்தமின்றியும், மகிழ்வாக கற்றல் செயல் புரிவர்.

**ஓவியத்தில் இலக்கணம் கற்றல், கற்பித்தல்**

மாணவர்கள் இலக்கிய வகுப்பு என்றால் சிறிது சோர்வாக காணப்படுவர். அவர்களை ஆர்வமூட்டும் விதமாக ஆசிரியர் கரும்பலகையில் ஒரு சில மாணவர்களை அழைத்து ஆசிரியர் கூறுகின்ற ஓவியம் மாணவர் திரனுக்குப் கற்பணைக்கும் ஏற்ப வரையச்செய்ய வேண்டும். இவ்வாறாக சில படங்கள் வரைந்தபின் இலக்கண விளக்கங்கள் கூறி அவற்றோடு மாணவர்கள் வரைந்த ஓவியங்களைத் தொடர்பு படுத்தி காண்பிக்க வேண்டும். எ.காடு ஒரு மாணவன் காக்கை வரைந்துள்ளான் என்றால் அதில்

1. காக்கையின் நிறம் கருமை – நிறப்பன்பு
2. சிறுவன் படம் வரையப்பட்டிருந்தால் - ஆண்பால்
3. சிறுமி படம் வரையப்பட்டிருந்தால் - பெண்பால்
4. மரம், மரங்கள், வரையப்பட்டிருந்தால் - ஒருமை, பண்மை

என்றவாறு இலக்கனங்களில் ஓவியங்களை தொடர்புபடுத்தி எடுத்துக்காட்டி காட்சிப் படுத்தி கற்பித்தல் வேண்டும்.

**மாணவர் ஒப்படைப்பு பணிவழங்குதல்**

ஆசிரியர் தான் கற்பித்த பாடம் சார்ந்த மையக்கருத்தை அல்லது கதாபாத்திரங்கள், காட்சிகள் ஏதேனும் ஒன்றினை வண்ண பெண்சில்களால் ஓவியமாக வரைந்து வருமாறும் அந்த ஓவியத்தின் விளக்கத்தை வரைந்த மாணவன் வகுப்பறையில் அனைத்து மாணவர்களுக்கும் விளங்குமாறு விளக்கம் கூறி ஓவியத்தை காட்சிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாணவரும் தமிழ்மொழி பாடத்திற்கென ஒரு கோப்பு (file) வைத்துக்கொள்ள வேண்டும் அதில் தான் பாடத்தொடர்பாக வரைந்த ஓவியங்கள், விளக்கக்குறிப்புகள், முக்கிய பாடக்குறிப்புகளை சேகரித்துக் கொண்டு தேர்வு நேரங்களில் அவைகளை மீள்பார்வை குறைந்த நேரம் செய்தால் போதுமானது.

முடிவுரை

இத்தகைய நுண்களைகளுக்கு பிற நாடுகள் அதிக முக்கியத்துவம் கொடுத்து மாணவர் விரும்பும் கலையை அவனது விருப்பப்பாடமாகத் தேர்ந்தெடுத்து அக்கலையில் தேர்ச்சிபெறும்படியான பாடத்திட்டங்கள் பள்ளிகளில் செயல்படுத்தப் பட்டுள்ளன. எனவே இச்சிறப்பு மிக்க ஓவியக்கலை வழியே தமிழ்மொழி கற்றால் மாணவர்கள் மகிழ்வோடும், ஆர்வமோடும், கற்றல் செயலில் சோர்வின்றி ஈடுபாடு காட்டுவர், படைப்பாற்றல் திறன் பெற்றும் விளங்குவர்.

**துணைநூற்பட்டியல்**


1. இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம் வெளியீடு சென்னை பல்கலைக்கழகம்
2. முனைவர் இராசு. பவுன்துரை – தமிழ்நாடு ஓவியங்கள் மணிவாசர் பதிப்பகம் சிதம்பரம்
3. கிருஷாங்கினி - பரதம் புரிதல் சதுரம் பதிப்பகம் 34 சிட்லபாக்கம் 2-ம் பிரதானசாலை தாம்பரம் சென்னை – 47
4. டாக்டர். சுக்திவேல். சு- நாட்டுப்புறவியல் ஆய்வு மணிவாசகர் பதிப்பகம் சிதம்பரம்
5. சுப்ரமணியன்.வ கணபதி.க – ஓவியப் பயிற்சி சாந்தா பப்ளிஷர்ஸ் முத்து விழா இல்லம் 13/5 ஸ்ரீ புரம் 2 வது தெரு இராயப்பேட்டை சென்னை- 600014
6. முனைவர். சேல்லப்பன். இரா – பல்கலைத் தமிழ் கலைகள் பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி – 620024
7. டாக்டர். தட்சிணாமூர்த்தி .அ -தமிழர் நாகரிகம் பண்பாடு யாழ் வெளியீடு AP. 1180, தென்றல் குடியிருப் மேற்கு அண்ணாநகர் சென்னை – 600040.
8. முனைவர். நாகராஜன் .கி–கல்வி ஆராய்ச்சி நெறிமுறைகள் ராம் பப்ளிகேஷன்ஸ் 74 விவேகானநந்தர் தெரு காந்தி நகர் சால கிராமம் சென்னை- 93.
9. முனைவர். மீனாட்சி சுந்தரம். அ–கல்வியியல் தத்துவமும் சமுதாயமும் காவ்யமாலா பப்ளிஷர்ஸ் சின்னாளப்பட்டி திண்டுக்கல் மாவட்டம் 624301. தமிழ்நாடு
10. சங்கீத வித்வான் ருக்மணிரமணி. டாக்டர் - இந்திய இசை சாந்தா பப்ளிஷர்ஸ் முத்து விழா இல்லம் இராயப்பேட்டை சென்னை- 14
11. வடிவேலு. சீ. வி–ஓவியம் ஆரம்ப பயிற்சி முறைகள் சந்தியா பதிப்பகம் 57-53வது தெரு அசோக் நகர் சென்னை–6000083
12. டாக்டர்.விஜயலட்சுமி இராமசாமி – நாட்டுப்புறவியல் சாந்தா பப்ளிஷர்ஸ் முத்து விழா இல்லம் 13/5 ஸ்ரீபுரம் 2வது தெரு இராயப்பேட்டை சென்னை – 600014.
13. விக்கிப்பீடியா – தமிழர் கலைகள்